# DIOCESE OF CHINGLEPUT

## NEWS LETTER

website:www.chengaidiocese.org
Email : chengaidiocese@yahoo.co.in
*Ph : 27426649*
*Fax : 27431784*

**Vol. 09 No.02 February 2011**



# நல வாழ்வு
# இறைவன் நமக்கு நல்கும்
# அருள் வாழ்வு

# BISHOP'S ENGAGEMENTS

FEBRUARY 2011

| DATE | DAY | PROGRAMME | PLACE |
|---|---|---|---|
| 01st | Tue Eve | Silver Jubilee | M. Kandigai |
| 02nd | Wed Mor | Recollection | Bishop's House |
| 02nd - 06th | | TNBC Half Yearly Meeting | Santhome |
| 06th | Sun Eve | Mass | Thirusulam |
| 08th | Tue Eve | Siver Jubilee - Mass | Erukkencherry |
| 09th | Wed Eve | Mass | Melrosapuram |
| 10th | Thu Eve | Annual Day - St. Joseph's School | Chingleput |
| 11th | Fri Eve | Feast | Madipakkam |
| 12th | Sat Eve | Feast | Muttukadu |
| 13th | Sun Mor | Confirmation | Vanuvampet |
| | Eve | Mass | Acharapakkam |
| 17th | Thu Mor | Consult | Bishop's House |
| 19th | Sat Mor | Silver Jubilee - FSJ | St. Thomas Mount |
| | Mor | Women Commission Meeting | Pastoral Centre |
| | Eve | Annual Day - St. Paul's School | Bishop's House |
| 20th | Sun Mor | Sponsor's Day | Bishop's House |
| 23rd | Wed Mor | Silver Jubilee | Santhome |
| 27th | Sun Mor | Mass | Santhome |



# From Bishop's Desk...

**February 2011**

***My Dear Fathers/Brothers/Sisters,***

8th January 2011, was indeed a red letter day in the history of the infant diocese of Chingleput. It was on that day that the Lord in His bountiful mercy had bestowed a singular privilege and honour on our diocese. Thousands of people had gathered on St. Thomas mount that day to celebrate the historic event of the elevation of St. Thomas Mount Shrine to the dignity of a National Shrine. St. Thomas Mount richly deserves this honour because the sacred hill, where the great Apostle laid down his life, bearing witness to the Lord Jesus and His Gospel, has for centuries been considered as the cradle of Christianity in India and the glory of the Indian Church.

It was not only a moving celebration, but certainly a unique blessing to all of us gathered there. Can we ever hope to have 120 Bishops along with two Cardinals and the Apostolic Nuncio celebrating the Solomn Eucharist and bringing down God's special blessings upon us? It was truly a 'once-in a life-time experience'. I would like to place on record my sincere sentiments of gratitude and appreciation to everyone who contributed to make this event a memorable one.

The core committee under the able leadership of our Vicar General spared no efforts in making this event a grand success. I want to appreciate all the members of the various committees for their meticulous planning, hard work and sacrifice. My hearty congratulations to the rector of the Shrine, to all his able associates and to the parishioners of St. Thomas Mount. I am sure we will continue to receive countless blessings from the Lord through the powerful intercession of St. Thomas. May God accompany us in our ministry.

God Bless You



**+ Rt. Rev. Dr. A. Neethinathan**
**Bishop of Chingleput**

# NEWS FROM THE PASTORAL CENTRE

## COMMON RECOLLECTION

Date: 02.02.2011
Time: 09.30 am to 01.00 pm
Place: Bishop's House, Chingleput
Resource Person: Rev. Fr. Rollington, Regional Secretary, Liturgy Commission - TNBCLC

———————————————————————

## மறைமாவட்ட மேய்ப்புப்பணிகளுக்கு பள்ளி ஆசிரியர்களின் பங்களிப்பு தொகை

| பள்ளி / இடம் | பங்களிப்பு தொகை |
|---|---|
| புனித ஹெலன்ஸ் மகளிர் மேல்நிலைப்பள்ளி, புனித தோமையார் மலை | 11,000.00 |
| ஆர்.சி. தொடக்கப்பள்ளி, பாப்பநல்லூர் | 5,000.00 |
| மொத்த தொகை | **16,000.00** |
| **கூட்டுத் தொகை** | **2,45,801.00** |

## மறைமாவட்டத்தில் இறை இரக்கத்தின் பக்தி

மனிதர் உலகம் முழுவதையும் ஆதாயமாக்கிக் கொண்டாலும் தம் வாழ்வையே இழப்பாரெனில் அவருக்குக் கிடைக்கும் பயனென்ன? அவர் தம் வாழ்வுக்கு ஈடாக எதைக் கொடுப்பார்? (மத் 16:26) என்ற இயேசுவின் வார்த்தை நமது ஆன்மாவை தயார்படுத்த அழைக்கிறது. எங்கும், எதிலும் விஞ்ஞானம், தொழில்நுட்பம் என்பனவற்றின் முன்னேற்றத்தால் மக்களின் கலாச்சாரமும், பண்பாடும், ஆன்மீக வாழ்வும் சீரழிந்து கொண்டிருக்கிற இக்காலக் கட்டத்திலே இறைமகன் இயேசு கிறிஸ்துவின் பணி இன்னும் புதிய வழியிலே, புதிய அணுகுமுறைக் கொண்டு மக்களைச் சென்றடைய வேண்டியது மிகவும் அவசியம். அவ்வகையில் இவ்வுலகை தமது இரண்டாம் வருகைக்காக தயாரிப்பதற்காக இயேசு கிறிஸ்துவே அருட்சகோதரி பாஸ்டீனா மூலம் கொடுத்திருப்பது தான் இறை இரக்கத்தின் பக்தி.

உலக அளவில் இறை இரக்க பக்தியைப் பரப்புகின்ற ஆஸ்திரேலியா நாட்டைச் சேர்ந்த இருவரும், சிங்கப்பூர் நாட்டைச் சேர்ந்த ஒருவரும்,

இந்திய அளவில் இப்பணியை செய்கின்ற குருவானவர் என்று நான்கு பேரைக் கொண்ட ஒரு குழு நமது மறைமாவட்டத்தை 90 வது மறைமாவட்டமாகத் தேர்ந்தெடுத்தது, ஆயரின் அனுமதியின் பேரில் மேய்ப்புப்பணி நிலையத்தின் உதவியைக் கொண்டு ஜனவரி 2 ம் தேதி முதல் 09 தேதி வரை நமது மறைமாவட்டதிலுள்ள 14 பங்குகளுக்கும், 10 பள்ளிகளுக்கும், 1 கல்லூரிக்கும், 4 துறவற இல்லங்களுக்கும் சென்று இப்பக்தியைப் பரப்பியது அவற்றின் விவரம் பின்வருமாறு:

| S.No | Date | Parishes | Schools, Colleges &Formation House |
|---|---|---|---|
| 01 | 02.01.11 | Tambaram, Chingleput, Kancheepuram | |
| 02 | 03.01.11 | Vanuvampet | St. Mary's Hr. Sec. School, St. Mary's B.Ed College (Chingleput), St. Joseph's Hr. Sec. School (Chingleput) |
| 03 | 04.01.11 | Alandur, Kamarajapuram | Dominic's A.I. Hr. Sec School, D.M.I. Novitiate (St. Thomas Mount) |
| 04 | 05.01.11 | Mudichur | Monfort Hr. Sec. School, Marian Hr. Sec. School (St. Thomas Mount), Vincent Pallotine's Hr. Sec. School (Rajaji Nagar), St. Anne's Novitiate (Mathananthapuram), St. Joseph's Minor Seminary (Mudichur) |
| 05 | 06.01.11 | Perungalathur | St. Joseph's Hr. Sec. School (Acharapakkam), St. Joseph's Hr. Sec. School (Madurantagam), St. Joseph's Hr. Sec. School, Maraimalai Nagar |
| 06 | 07.01.11 | Palavakkam, Pozhichalur | St. Mary's Mat. School (Guduvancherry) |
| 07 | 08.01.11 | Vallam | St. Anne's Postulancy (Melamaiyur) |
| 08 | 09.01.11 | Mahalakshmi Nagar, Guduvancherry, Madipakkam | |

**Rev. Fr. George Stephen**
**Director**

# அன்பியம்

## பங்களவில் களப்பணி

**பங்கு** : கிறிஸ்து அரசர் ஆலயம், பழைய பெருங்களத்தூர்

**நாள்** : ஜனவரி 11, 12, 13, 17, 19, 20, 22 ம் தேதிகள் (7 நாட்கள்)

**பணி** : குடும்பங்களைச் சந்தித்தல், மாதிரி கூட்டம், அன்பியப் பொறுப்பாளர்கள் தேர்வு

**அன்பியங்கள் :** 12

**வழிநடத்தியவர்கள்:** அருட்பணி. ஜார்ஜ ஸ்டீபன் (செயலர்), களப்பணியாளர்கள்

## பங்களவில் பயிற்சி

**பங்கு** : மாசற்ற இருதய அன்னை ஆலயம், காஞ்சிபுரம்

**நாள்** : ஜனவரி 23 ம் தேதி, ஞாயிற்றுக்கிழமை

**பணி** : அன்பிய பொறுப்பாளர்கள் பயிற்சி, பங்குபேரவை பயிற்சி, அன்பிய ஒருங்கிணைப்பு பொறுப்பாளர்கள் தேர்வு நடைபெற்றது.

**வழிநடத்தியவர்கள்:** அருட்பணி. ஜார்ஜ ஸ்டீபன் (செயலர்), களப்பணியாளர்கள்

## வடமண்டல அன்பிய கூட்டம்

**(சென்னை - மயிலை, பாண்டி - கடலூர், செங்கல்பட்டு, வேலூர்)**

**நாள் :** ஜனவரி 18, 2011

**இடம்:** மேய்ப்புப்பணி மையம், பாண்டி-கடலூர் மறைமாவட்டம்

**பங்குபெற்றோர்:** 10 நபர்கள் (நம் மறைமாவட்டம்), மொத்தம் 40 நபர்கள்

பாண்டி-கடலூர் மறைமாவட்ட **ஆயர் மேதகு அனந்த ராயர்** அவர்கள் அன்பியங்கள் ஒருங்கிணைப்புப் பற்றிய கருத்துகளை பங்கேற்பாளர்களோடு பகிர்ந்து கொண்டார்.

***எடுக்கப்பட்ட தீர்மானங்கள்:***

- தமிழக ஆயர் பேரவை வழங்கியுள்ள அன்பியம் பற்றிய மதிப்பீட்டு படிவத்தை ஏப்ரல் மாதத்திற்குள்ளாக முடித்தல்
- மண்டல அளவில் அன்பிய பொறுப்பாளர்களுக்கான தொடர் உருவாக்கப் பயிற்சி கொடுத்தல்
- அன்பிய கையேடு

**அருட்பணி. ஜார்ஜ் ஸ்டீபன்**
**செயலர்**

# இளையோர் பணியகம்

## மறைமாவட்ட அளவில்

ஜனவரி 9 ம் தேதி தமிழர் தினவிழாவான பொங்கல் திருநாளில் அனைத்து இளைஞர்களையும் ஒன்றிணைத்து மறைமாவட்ட அளவில் ஆண்களுக்கான கைபந்து போட்டியும், பெண்களுக்கான பந்து எறிதல் போட்டியும் நடத்தப்பட்டது. இதில் 6 பங்குகளிலிருந்து இளைஞர்களும், இளம் பெண்களும் பங்கு பெற்றனர். பங்கு பெற்ற அனைத்து இளைஞர்களுக்கும் அவர்களை ஊக்குவித்து அனுப்பிய பங்குத்தந்தையர்களுக்கும் மற்றும் உதவிப் பங்குத்தந்தையர்களுக்கும் இளையோர் பணியகத்தின் சார்பாக நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

## பங்களவில்

ஜனவரி 16 ம் தேதி இளையோர் பணியகத்தின் களப்பணியாளர் அருட்சகோதரர் அவர்கள் புனித பேட்ரிக் ஆலயம், தோமையார் மலை பங்கு இளையோரை சந்தித்து இளையோர் ஆண்டில் அவர்களின் செயல்பாடுகளைப் பற்றியும் அவர்களுக்கென்று புதிய தலைவர்களைத் தேர்ந்தெடுத்தல் பற்றியும் கலந்தாலோசித்தார்.

## மாநில மாநாடு (30.01.2011, ஞாயிற்றுக்கிழமை)

ஜனவரி 30 ம் தேதி இளைஞர்களுக்கான மாநில மாநாடு மிகவும் சிறப்பாக நடைபெற்றது. தமிழகம் முழுவதும் உள்ள பல்வேறு மறைமாவட்டங்களிலிருந்து சுமார் 38,000 க்கும் மேலான இளைஞர்கள் கலந்து கொண்டனர். இதில் நமது செங்கை மறைமாவட்டத்திலிருந்து ஒவ்வொரு பங்காக நேரில் சென்று கணக்கெடுத்ததில் பதிவு செய்யப்பட்ட இளைஞர்களின் எண்ணிக்கை 2473, இளம் கிறிஸ்தவ மாணாக்கர் / இளம் மாணாக்கர்களின் எண்ணிக்கை 248 மொத்தம் 2,721 இளைஞர்கள். மாநாட்டில் கலந்து கொண்ட இளையோர் மற்றும் மாணவ மாணவிகளின் எண்ணிக்கை சுமார் 4,000 க்கும் மேற்பட்டோர் என்பது மிகச்சிறப்பாக குறிப்பிடத்தக்கது. மேலும் அன்றைய நாளில் நமது மறைமாவட்த்தின் உதவியோடு இசைக் குறுந்தகடு (இயேசுவின் நண்பனாய்...) வெளியிடப்பட்டது. இம்மாநாட்டில் கலந்துகொண்ட அனைத்து இளைஞர், இளம்பெண்களுக்கும் மற்றும் இளைஞர்களை ஊக்குவித்து உடன்வந்து கலந்து கொண்ட பங்குத்தந்தையர்களுக்கும் இளையோர் பணியகத்தின் சார்பாக வாழ்த்துக்கள்

## இ.கி.மா / இ.மா இயக்கம் பள்ளி அளவில்

| **தேதி** | **பள்ளி** |
|---|---|
| 11.01.11 | அமல அன்னை உயர்நிலைப்பள்ளி, மாம்பாக்கம் |
| 13.01.11 | ஆர்.சி. உயர்நிலைப்பள்ளி, காந்திநகர், மதுராந்தகம் |
| 13.01.11 | புனித சூசையப்பர் உயர்நிலைப்பள்ளி, கே.கே. புதூர் |
| 13.01.11 | ஆர்.சி.எம். நடுநிலைப்பள்ளி, செங்காட்டூர் |
| 19.01.11 | ஆர்.சி.எம். உயர்நிலைப்பள்ளி, வாலாஜாபாத் |
| 19.01.11 | ஆர்.சி. எம். நடுநிலைப்பள்ளி, செல்லம்பட்டிடை |
| 19.01.11 | புனித அன்னாள் உயர்நிலைப்பள்ளி, வளர்புரம் |
| 20.01.11 | புனித சூசையப்பர் மேல்நிலைப்பள்ளி, கிழக்கு தாம்பரம் |
| 20.01.11 | கிறிஸ்து அரசர் நடுநிலைப்பள்ளி, கிழக்கு தாம்பரம் |
| 21.01.11 | திரு இருதய மெட்ரிக்குலேஷன் பள்ளி, காமராஜபுரம் |

**அருட்பணி. K.C. அமலோற்பவ ராஜ்**
**செயலர்**

## SC/ST பணிக்குழு

- டிசம்பர் 25, 2010 மற்றும் ஜனவரி 01, 2011 ம் தேதிகளில் கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு திருப்பலி R.N. கண்டிகை பங்கில் பணியக செயலர் அவர்களால் நடைத்தப்பட்டது. மிக மகிழ்ந்த திருவேளையாக அருள்பொழியும் இரவாக அந்நள்ளிரவு அமைந்ததை மக்கள் மகிழ்ந்து நெகிழ்ந்தனர்.
- ஜனவரி 8 ம் தேதி புனித தோமையார் மலை தேசிய திருத்தலமாக உயர்த்தப்பட்ட திருநிகழ்வு நடைபெற்றது. பணிக்குழுவின் வாழ்த்துக்கள்
- ஜனவரி 16 ம் தேதி பொங்கல் திருப்பலியை திருப்பெரும்புதூர் இறை சமூகத்தினர் உடன் இணைந்து கொண்டாடினோம்.
- ஜனவரி 22 ம் தேதி மற்றும் 23 ம் தேதி மறைமாவட்ட அளவிலான மாணவர் திறன் வளர் பயிற்சி முகாம் நடைபெற்றது. இதில் 40 மாணவர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.
- ஜனவரி 23 ம் தேதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் செங்கை பழைய பேருந்து நிலையத்திலிருந்து 10 மற்றும்12 ம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதும் மாணவ மாணவிகளின் உரிமைக்கான (துடையில்லா மின்சாரம், நலன் படைத்த ஆதித்திராவிட விடுதிகள், தேர்வு முடிந்ததும் சுற்றுலா) பொதுக்கூட்டத்தில் 46 மாணவ மாணவிகளும், செயலரும், ஒருங்கிணைப்பாளரும் கலந்து கொண்டனர்.
- இனி வரும் காலங்களில் பொதுக்கல்லறை, பொது வழிபாடு, சமத்துவ நீதி வழியில் நமது மறைமாவட்டத்தில் அனைத்து திருவழிபாடு மற்றும் செயல்பாடுகள் அமைய பங்குப்பணியாளர்களாகிய நாம் பாடுபடுவோம்.

**அருட்பணி. ஆரோக்கிய ரேமண்ட்**
**செயலர்**

## தொழிலாளர் பணியகம்

- ஜனவரி மாத மாதாந்திர கூட்டம் ஜனவரி 16 ம் தேதி தாம்பரம் பங்கில் நடைபெற்றது. இதில் குறைந்த அளவிலேயே நபர்கள் கலந்து

கொண்டனர். பங்கு பணியாளர்கள் இதற்கான ஆவண செய்யவும்.

- பிப்ரவரி மாத கூட்டம் பாலவாக்கம் பங்கில் நடைபெறும்.
- ஜனவரி 30 ம் தேதி **"திறன் மேம்பாட்டு பயிற்சி"** முகாம் குடை செய்யும் பயிற்சி மடிப்பாக்கம் பங்கில் நடைபெற்றது.
- மார்ச் மாதத்தில் **"மகளிர் நாள்"** கொண்டாட உழைக்கும் இளம் கிறித்தவ பெண்களை அழைத்து சிறப்பிக்க முடிவானது.
- சுனாமி கொடுந்தாக்குதலின் போது சிறப்பாக பணியாற்றியமைக்காக கிறித்தவ தொழிலாளர் இயக்க பணியாளர்களில் ஒருவராகிய தேசிய இயக்க தலைவர் திரு. ராஜாமணி அவர்களுக்கு SUN TECH என்ற நிறுவனம் அன்னை தெரேசா விருது வழங்கியது. விருதுபெற்ற திரு. ராஜாமணி அவர்களை தொழிலார் பணியகம் சிறப்பாக வாழ்த்துகிறது.

**அருட்பணி. ஆரோக்கிய ரேமண்ட்**
**செயலர்**

## நற்செய்தி அறிவிப்பு பணியகம்

- ஜனவரி 9 ம் தேதி கூட்டம் தாம்பரம் பங்கில் நடைபெற்றது. அதில் கடந்த (ஜுன் - டிசம்பர்) வரையிலான பணியின் மதிப்பீட்டமர்வும், பகிர்வும் இருந்தது. அதைக் கொண்டு சில திட்டங்கள் தீட்டப்பட்டன.
- பிப்ரவரி 5 மற்றும் 6 ம் தேதிகளில் நற்செய்தி பணியாளர்களுக்கு **"ஆற்றுப்படுத்துதல்"** பயிற்சி அச்சிறுப்பாக்கம் மழைமலை மாதா அருட்தலத்தில் நடைபெறும். கட்டாயம் அனைவரும் கலந்து கொள்ளவும்.
- பிப்ரவரி 12 மற்றும் 13 ம் தேதிகளில் நற்செய்தி பணியாளர்களுக்கு **"குடி நோய் – ஓர் அறிமுகம்"** எனும் கருத்தில் பயிற்சி பட்டறை நடைபெறும். தவறாமல் அனைவரும் கலந்து கொள்ளவும். தங்களின் தாராள உள்ளத்தை வெளிப்படுத்தி செலவினங்களை எதிர்கொள்ள உதவவும்

**அருட்பணி. ஆரோக்கிய ரேமண்ட்**
**செயலர்**

# VOCATION COMMISSION

## SPONSORS' DAY

We are glad to inform you that for the second time in our diocese we are organizing ***Sponsors' day*** to honour and motivate all those who are part of the noble cause of helping in the formation of our diocesan seminarians. We hope that this effort of acknowledging, appreciating and honouring the sponsors will surely encourage many more people to become part of this noble mission. The Sponsor's Day will be held on 20th February at our Diocesan Pastoral Centre.

## ALTAR SERVERS' RALLY

Alter Servers's rally is conducted every year on behalf of the Vocation Commission to foster vocation in the diocese. This year the servers' rally was held in four different zones. We divided all the ten vicariates into four zones and the rally was conducted. The rally for the vicariates of Covelong and Pallavakkam was held at Vettuvankeni on 9th January, 130 students from 14 parishes of those vicariates took part in the rally. Rev. Fr. Shylock Stephen, the Vicar Forane, presided over the Eucharistic celebration. At the end he distributed the prizes for the best performers of the day. Rev. Fr. Edmund Doss and the sisters of St. Anne's of Trichy assessed the cultural programme. During the day Rev. Fr. John Kurien, the Vocation Promoter, met all the boys who are studying 9th, 10th, 11th, 12th std. to implant the seed of priestly vocation in them.

The Altar Servers' rally for the vicariates of Madurantagam and Cheyyur was held at Madurantagam on 16th January. 132 students from 14 different parishes of those vicariates participated in the rally. Rev. Fr. A.T. James SDB, the Vicar Forane of Madurantagam presided over the Eucharistic celebration. The mass was so innovative so as it inspired the Altar servers on vocation.

The rally for the vicariates of Chingleput, Palliagaram and Kancheepuram was held at Chingleput on 23rd January. 120 students from three different vicariates participated in the rally. Rev. Dr. P. Ambrose, the Vicar General presided over the Eucharistic celebration and appreciated the Altar servers

and told that they have the privilege of serving very closely to the altar of the Lord. He encouraged the parishes which took active participation in all the events of the day. Dn. Christopher conducted the quiz. Sr. Aarasi and Dn. Christopher evaluated the culturals.

The rally for the vicariates of Tambaram, St. Thomas Mount and Pallavaram was organised at Tambaram on 30th of January. 418 students from 17 different parishes of those vicariates participated in the rally. Rev. Sr. Lilly Jose, headmistress of Christ King Matriculation School and Rev. Sr. Maria Karunya, Diocesan CRI Secretary started the prayer service. The high-light of the day was the arrival of our Bishop **Rt. Rev. Dr. A. Neethinathan**. Rev. Fr. George Stephen, Pastoral Centre Director was present for the culturals. The initiation students of our diocese were very helpful to the Vocation Commission in conducting the rally. The rally had enkindled the interest of the students to serve more closely at the altar of the Lord.

**Rev. Fr. John Kurien**
**Vocation Promoter**

## சிறைப்பணிகுழு

டிசம்பர் 19 ம் தேதி கிறிஸ்து பிறப்பு விழாவை முன்னிட்டு செங்கல்பட்டு சிறுவர் சிறைச்சாலையில் இருக்கின்ற 53 மாணவர்களுக்கு கிறிஸ்து பிற்ப்பு விழா நிகழ்வுகள் செங்கல்பட்டு சிறைப்பணிகுழு சார்பாக நடத்தப்பட்டன. அன்று காலை 11 மணிக்கு தாம்பரம் மறைவட்ட முதன்மைகுரு அருட்பணி. அருள்ராஜ் அவர்களால் திருப்பலி நிறைவேற்றப்பட்டு அனைத்து மாணவர்களுக்கும் பக்கெட், மக்கு மற்றும் இனிப்புகள் வழங்கப்பட்டது. இதில் தாம்பரம் பங்கை சார்ந்த 70 இளைஞர், இளம் பெண்கள் கலந்துக் கொண்டு சிறப்பித்தனர். மேலும் அனைத்து மாணவர்களுக்கும் டிசர்ட் வழங்கப்பட்டது. இதற்கு உதவி செய்தவர்கள் அருட்பணி.தேவசியா (ரூ.2,000), அருட்பணி. ஜார்ஜ் பாலக்காட்டு குன்னல் (ரூ.500). இவர்களுக்கு நன்றி.

பிற்பகல் 1.00 மணிக்கு மதிய உணவு அனைத்து மாணவர்களுக்கும் வழங்கப்பட்டது. உதவி செய்த தாம்பரம் பங்கை சார்ந்த திரு. மரியதாஸ் மற்றும் செங்கல்பட்டு பங்கை சார்ந்த திரு. லூயிஸ் அவர்களுக்கு நன்றி.

கிறிஸ்துமஸ் தாத்தா இனிப்பு வழங்க கலை நிகழ்வுடன் விழா சிறப்புடன் அமைந்தது.

டிசம்பர் 20 ம் நமது மறைமாவட்ட **ஆயர் மேதகு நீதிநாதன்** ஆண்டகை அவர்களால் சென்னை புழல் பெண்கள் மத்திய சிறைச்சாலையில் திருப்பலி நிறைவேற்றப்பட்டு அனைத்து பெண் கைதிகளுக்கும் புடவை வழங்கப்பட்டது. கிறிஸ்து பிறப்பு விழா திருப்பலியை சிறைச்சாலையில் நிறைவேற்றி ஆசீர் வழங்கிய நமது ஆயர் அவர்களுக்கு நன்றியை சிறைப்பணிகுழு சார்பாக தெரிவித்துக் கொள்கிறோம்.

டிசம்பர் 25 ம் தேதி புழல் பெண்கள் மத்திய சிறைசாலையில் அருட்பணி. அதிரூபன் அவர்களால் திருப்பலி நிறைவேற்றப்பட்டு அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது. அதை தொடர்ந்து சிறை கைதிகளுக்கு திருவிவிலியம் வழங்கப்பட்டது.

சிறைப்பணிக்கு உதவி செய்ய நினைக்கும் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் மற்றும் இறைமக்கள் அனைவரும் அன்புடன் வரவேற்கப்படுகிறார்கள்.

**தொடர்புக்கு: 9840096026**

**அருட்பணி. அதிரூபன்**
**செயலர்**

## BIRTHDAY WISHES

| | |
|---|---|
| Fr. Kanikai Raj G. | 06.02.1971 |
| Fr. Antony J. | 11.02.1979 |
| Fr. John Bosco P. | 22.02.1960 |
| Fr. Damian Arulanand D. | 22.02.1977 |
| Fr. Arulappa E. | 25.02.1960 |
| Fr. Francis C. | 03.03.1968 |

## ORDINATION ANNIVERSARY

| | |
|---|---|
| Fr. Balasamy D. | 03.02.1975 |

# FROM THE PROCURATOR'S DESK

## SURPLUS MASSES

**January 2011**

| | |
|---|---|
| Parish Priest, Chingleput | 3,000.00 |
| Parish Priest, Tambaram | 45,450.00 |
| Parish Priest, Perungalathur | 10,000.00 |

## SEMINARIANS' FUND

**January 2011**

| | |
|---|---|
| Mr. S.M. Lourdu Samy, Madurantagam | 600.00 |
| Provincial Superior, St. Ann's Provincialate, Melamiyur | 10,000.00 |
| Mrs. Josephine Rita, Chingleput | 1,500.00 |
| Ms. Violet Jacob, Chingleput | 1,000.00 |
| Mr. Bernard and Family, Chingleput | 1,500.00 |
| Mr. Asirvatham, Tambaram | 6,500.00 |
| Parish Priest, Perungalathur | 15,000.00 |
| Mrs. Emili Thangam Rajamanikam, Tambaram | 5,000.00 |
| Parish Priest, Sholinganallur | 3,000.00 |

## BISHOP NEETHINATHAN'S EDUCATION FUND

**January 2011**

| | |
|---|---|
| Mr. Antony Francis, Pallavaram | 400.00 |
| Parish Youth Association, Perungalathur | 15,000.00 |

**Rev. Fr. P. Charles**
**Procurator**

# OFFICIAL NOTIFICATIONS

| | |
|---|---|
| 02.02.2011 | Presentation of the Lord - Feast |
| 04.02.2011 | St John De Britto - Feast |
| 22.02.2011 | Chair of St Peter - Feast |

## HOLY FATHER'S PRAYER INTENTIONS FOR

**FEBRUARY 2011**

**GENERAL:** That the family may be respected by all in its identity and that its irreplaceable contribution to all of society be recoginzed.

**MISSION:** That in the mission territories where the struggle against disease is most urgent, Christian communities may witness to the presence of Christ to those who suffer.

## MARRIAGE QUARTERLY RETURNS

Parish Priests are kindly requested to send to the Chancellor, the Marriage Quarterly Returns for the IV quarter i.e. October to December 2010 as early as possible. Those who are yet to submit the other three quarters (January to September) are reminded to send them at the earliest.

## STATISTICS 2010

The Parish Priests and Superiors of the Religious Houses (Men & Women) should have received by this time "Statistics 2010" forms to be filled in and returned to the Chancellor. If by any chance, someone has not received it or lost it kindly write to the Chancellor for a fresh form. Please send us the filled-in forms on or before 28$^{th}$ February, without fail and without delay. They are important and necessary document to be compiled not only for our diocesan records but also to be sent to Rome for Pontifical Annual. Kindly co-operate.

**The Chancellor**

# COMMUNITY HALL BLESSING

## PERUNGALATHUR



The newly built Community Hall was blessed and opened by our beloved Bishop **Rt. Rev. Dr. A. Neethinathan** on 16th January, 2011. We appreciate Rev. Fr. Devasia and the Parishioners of Perungalathur for their zeal and enthusiasm.



***Edited by: Rev. Fr. N. Louis Rayar,*** *Chancellor*
*Bishop's House, Chingleput.*